தினமலர்

# ஜிப்மர் அமுதம் தாய்ப்பால் வங்கி 7 ஆண்டுகள் நிறைவு

**புதுச்சேரி, ஜூன் 28–**

ஜிப்மரின் அமுதம் தாய்ப்பால் வங்கி, 7 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

ஜிப்மர் பச்சிளம் குழந்தைகள் நலத்துறையின் தலைவர் அலுவலக செய்திக்குறிப்பு:

ஜிப்மர் மருத்துவமனையில் அமுதம் தாய்ப்பால் வங்கி, கடந்த 2016 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த 7 ஆண்டுகளாக பச்சிளம் குழந்தைகள் பலர் பயனடைந்துள்ளனர்.

தாய்மார்களால் சில காரணங்களால் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாத போது, தானமாக பெறப்பட்ட தாய்ப்பால் உதவுகிறது.

ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு 400 மில்லி தாய்ப்பால் சேகரிக்கப்பட்டது. தற்போது, ஆயிரம் மில்லி வரை சேகரிக்கப்படுகிறது. இதன் மூலம் தினமும் 20 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

தாய்ப்பால் பரிசோதிக்கப்பட்ட பிறகே குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. தாய்ப்பால் கொடுப்பதும், பெறுவதும் அவரவர் சொந்த விருப்பம். இதில், பணப்பரிமாற்றம் ஏதும் கிடையாது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
28.6.2023 (புதன்கிழமை)

## தாயை இழந்து தவிக்கும் குழந்தைக்கு உதவும்:

# பாலூட்டும் பெண்கள் தாய்ப்பால் தானமாக வழங்கலாம்

## ஜிப்மர் குழந்தைகள் நலத்துறை வேண்டுகோள்

புதுச்சேரி, ஜூன்.28-
தாயை இழந்து தவிக்கும் குழந்தைக்கு உதவும் என்று, பாலூட்டும் பெண்கள் தாய்ப்பால் தானமாக கொடுக்க முன்வர வேண்டும் என ஜிப்மர் அறிவுறுத்தி உள்ளது.

புதுச்சேரி ஜிப்மர் பச்சிளம் குழந்தைகள் நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### தாய்ப்பாலின் அவசியம்

ஜிப்மர் மருத்துவமனையில் 'அமுதம் தாய்ப்பால் மையம்' என்ற பெயரில் தாய்ப்பால் வங்கி கடந்த 2016-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் தினமும் 400 மில்லிதான் சேகரிக்கப்பட்டது. தற்போது நாள்தோறும் 1,000 மில்லி வரை தாய்ப்பால் சேகரிக்கப்படுகிறது. இதன் மூலம் நாள்தோறும் 20 குறைமாத குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல்படி முதல் 6 மாதங்களுக்கு குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தால் தாய் தன் குழந்தைக்கு நேரடியாக பால் கொடுக்க முடியாத போது அந்த அன்னையின் தாய்ப்பாலை கை அல்லது கருவி கொண்டு பீய்ச்சி எடுத்து குழந்தைக்கு கொடுக்க வேண்டும். அதுவும் முடியாத போது வங்கியிலிருந்து பெறப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட தாய்ப்பால் கொடுக்கலாம்.

### தானமாக கொடுக்கலாம்

பாலூட்டும் பெண்கள் அனைவரும் தாய்ப்பால் தானமாக கொடுக்க முன்வர வேண்டும். தங்கள் குழந்தைக்கு போக மீதம் உள்ள தாய்ப்பாலை வங்கிக்கு தானமாக கொடுப்பதால் எந்த பிரச்சினையும் ஏற்படாது. மாறாக பால் சுரப்பது அதிகரிக்கும். குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளும், தாயை இழந்த குழந்தைகளும் பயனடைவர். தாய்ப்பால் கொடுப்பதும், பெறுவதும் அவரவர் சொந்த விருப்பத்தை பொறுத்தது. இதில் பணப்பரிமாற்றம் எதுவும் கிடையாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.